# கொரோனாவால் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு கடன் திட்டம்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தவரின் குடும்பத்தில் வருமானம் ஈட்டக்கூடியநபர் கொரோனா வைரஸ் பாதிப்பால் உயிரிழந்திருப்பின் அவர்களது குடும்பத்தின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் வகையில் தேசிய பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார வளர்ச்சிக் கழகம் புதுடில்லி மூலம் **‘SMILE’**என்ற கடன் திட்டத்தை செயல்படுத்தவுள்ளது.

இத்திட்டத்தில் பயன்பெறவிரும்புவோரின் ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்குள் இருக்கவேண்டும். வருமானம் ஈட்டக்கூடியவரின் வயது 18 முதல் 60-க்குள் இருக்கவேண்டும். இத்திட்டத்தில் அதிகபட்சதிட்டதொகை ரூ.5. லட்சம் வரை இருக்கலாம். திட்டதொகையில் 80 சதவீதம் அல்லுத அதிகபட்சமாக ரூ. 4. லட்சம் வரை கடன் வழங்கப்படும். மீதமுள்ள 20 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.1 லட்சம் வரை மானியம் வழங்கப்படும். ஆண்டுக்கு 6 சதவீத வட்டி விகிதத்தில் கடன் தொகை வழங்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் கடன்பெற விரும்புவோர் குடும்பத்தில் வருமானம் ஈட்டக்கூடியவர் கொரோனாவால் உயிரிழந்ததற்கான ஆவணங்களுடன் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் 3-வது தளத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல அலுவலகத்திலோ அல்லது நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 3-ம் தளத்தில் அமைந்துள்ள கூட்டுறவு சங்கங்களின் இணைபதிவாளர் அலுவலகத்திலோ அல்லது கூட்டுறவு வங்கிகளிலோ விண்ணப்பத்தை பெற்று விண்ணப்பித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் திருமதி.இரா.லலிதா இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.